بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 17/05/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**ரஜீஃ போர் தொடர்பாக பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை குறிப்புகள் மற்றும் சஹாபா ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன் உடைய நேசம், நன்றியுணர்வு, தியாகங்கள் ஆகியவை குறித்த ஈமானுக்கு ஒளியூட்டும் குறிப்புகள்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

ரஜீஃ போர் பற்றி கூறப்பட்டு வந்தது. ஹதீஸ்களிலும் வரலாற்றுகளிலும் இதன் மேற்கொண்டு விவரம் இவ்வாறு கூறப்பட்டுள்ளது; ஸஹீஹ் புகாரியில் ரஜீஃ சம்பவம் குறித்து இவ்வாறு விளக்கமாக எழுதப்பட்டுள்ளது: ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் பத்துப் பேர் கொண்ட படையொன்றைத் தகவல் அறிந்து கொண்டு வருவதற்காக அனுப்பினார்கள். ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் அன்சாரி (ரலி) அவர்களை அமீராக நியமித்திருந்தார்கள். ஹுதைல் குலத்தைச் சேர்ந்த பனூ லிஹ்யான் என்றழைக்கப்பட்ட கிளையினரின் 200 அம்பெய்யும் வீரர்களை இவர்கள் எதிர்கொள்ள நேர்ந்தது. முஸ்லிம்கள் அவர்களைக் கண்ட போது ஒரு குன்றின் மேலே தஞ்சம் புகுந்தனர். முஸ்லிம்களுக்குத் தஞ்சம் அளிப்பதாகவும், கொல்ல மாட்டோம் என்றும் அவர்கள் நம்பிக்கையூட்டினார்கள். அந்த போர்ப்படைக்கு அமீராக இருந்த ஹஸ்ரத் ஆஸிம் பின் ஸாபித் அன்சாரி (ரலி) அவர்கள், நான் ஒரு காஃபிரின் (வாக்குறுதியை நம்பி அவனுடைய) பாதுகாப்பில் இறங்கிச் செல்ல மாட்டேன் என்று கூறினார்கள். இறைவா! எங்களின் நிலையை உன் தூதருக்குத் தெரிவித்து விடு என்று அனைவரும் துஆ செய்தார்கள். காஃபிர்கள் அவர்கள் மீது அம்பெய்தார்கள். ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் உட்பட 7 சஹாபிகள் ஷஹீதாகி விட்டார்கள்.

எதிரிகள் அடைக்கலம் தருவதாகக் கூறியதை நம்பி மூன்று பேர் கீழே இறங்கி வந்தனர். எதிரிகள் அந்த சஹாபிகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகு அவர்களைக் கயிற்றால் கட்டினார். அந்த மூவரில் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) என்ற சஹாபி, நீங்கள் செய்தது, முதலாவது நம்பிக்கைத் துரோகம் ஆகும். இறைவன் மீது ஆணையாக! நான் உங்களுடன் செல்ல மாட்டேன் என்று கூறினார்கள். அப்போது காஃபிர்கள் அந்த சஹாபியை நிர்பந்தித்தனர். ஆனால், அவர்கள் மறுத்துவிட்டபோது அவர்களை அங்கேயே ஷஹீதாக்கி விட்டனர். (இப்போது) ஹஸ்ரத் குபைப் (ரலி) மற்றும் ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்ணா (ரலி) ஆகியோர் எஞ்சி இருந்தனர். காஃபிர்கள் அவர்களைக் கொண்டு சென்று மக்காவில்

விற்றுவிட்டனர். ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களை ஹாரிஸ் பின் ஆமிர் பின் நவ்ஃபல் பின் அப்தே மானாஃப் -ன் மக்கள் வாங்கிக் கொண்டார்கள்.

இது புகாரியுடைய அறிவிப்பாகும். புகாரியுடைய அறிவிப்பின் அடிப்படையில், 10 சஹாபிகளைக் கொண்ட இக்குழு உளவுப் பணிக்காக நியமிக்கப்பட்டிருந்ததாக தெரிகிறது. ஒளிந்து மறைந்து செல்லும்போது (இவர்கள் உண்டு வீசிய) யஸ்ரிப் உடைய பேரீச்சம் பழக்கொட்டைகளை அடையாளம் கண்டு கொண்ட ஒரு பெண்மணி (இது யஸ்ரிப் உடைய பேரீச்சம் பழக்கொட்டைகள் என்று) கூச்சலிட ஆரம்பித்தாள். அப்போது எதிரிகள் இவர்கள் மீது தாக்குதல் தொடுத்து விட்டார்கள். ஆனால் அதிகமான வரலாற்றாசிரியர்கள் கூறுவதென்னவென்றால், இந்தக் குழு சுற்றுவட்டாரத்தின் சூழ்நிலைகளை ஆய்வு செய்வதற்காக ஆயத்தமாக இருந்தது; இது புறப்பட்டு சென்றிருக்கவில்லை. அப்போது பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்த ஒரு குழுவுடன் இவர்களை அன்னார் அனுப்பி வைத்து விட்டார்கள் என்று கூறியுள்ளார்கள்.

இதைக் குறித்து ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஹூத் (ரலி) அவர்களும் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்களும் பல்வேறு வரலாற்று நூல்களில் இருந்து அவர்கள் தீர்மானித்து கூறிய விஷயம் என்னவென்றால், புகாரி அல்லது வேறு எந்த வரலாற்று நூல்களில் இவர்கள் ஒளிந்து மறைந்து பயணம் செய்தார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளதோ அது அறிவிப்பாளர்களின் மறதியாக தெரிகிறது. ஏனென்றால் இப்பொழுது இந்தக் குழுவுக்கு ஒளிந்து மறைந்து செல்ல வேண்டிய அவசியம் இல்லை. இப்போது இவர்கள் அஸல் மற்றும் காராஹ் கோத்திரத்தைச் சார்ந்த மக்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். ஆனால், இவர்கள் உஸ்ஃபானுக்கும் மக்காவுக்கும் இடையில் சென்றடைந்திருந்த போது - அஸல் மற்றும் காராஹ் கோத்திரத்தைச் சார்ந்த மக்கள் ஒரு சூழ்ச்சி திட்டத்தின் அடிப்படையில் இவர்களை அழைத்துக் கொண்டு சென்று கொண்டு இருந்தார்கள் - அவர்கள் இந்த இடத்தை அடைந்தபோது தமது உடன்படிக்கையை முறித்துக்கொண்டு ஏற்கனவே அவர்கள் தீட்டி இருந்த திட்டத்தின் அடிப்படையில் பனூ லஹ்யானுக்குத் தகவல் கொடுத்திருப்பார்கள். அவர்கள் தாக்குதல் தொடுப்பதற்காக 200 நபர்களுடன் அங்கு வந்தடைந்து இருக்கலாம் என்று உறுதியாக கணிக்க முடிகிறது. அல்லாஹ்வே நன்கு அறிவான்.

ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் வீரத்துடன் போரிட்டவாறு ஷஹாதத் எனும் பானத்தை அருந்தியது தொடர்பாகவும் விபரம் காணக் கிடைக்கிறது. அன்னார் முதலில் அம்புகளைக் கொண்டு எதிரிகளை எதிர்கொண்டு கொண்டிருந்தார்கள். அம்புகள் முடிந்து விட்ட போது ஈட்டியைக் கொண்டு எதிரிகளின் மீது தாக்குதல் நடத்தினார்கள். ஈட்டியும் உடைந்து விட்ட போது வாள் மட்டுமே எஞ்சி இருந்தபோது வாளைக்கொண்டு எதிரிகளை எதிர்கொண்டு கொண்டிருந்தார்கள். தமது ஷஹாதத்தைப் பற்றி அவர்களுக்கு உறுதியானவுடன் அவர்களுக்குத் தமது உடல் அங்கத்தை மறைத்துக் கொள்வது குறித்து அச்சம் ஏற்பட்டது. ஏனென்றால் எதிரி யாரையெல்லாம் ஷஹீதாக்கினானோ அவர்களுடைய சடலங்களை சிதைத்து, ஆடையற்றதாக ஆக்கிக் கொண்டிருந்தான். அந்நேரத்தில் அவர்கள் தம் இறைவனிடம், அல்லாஹ்வே நான் பகலின் ஆரம்பம் முதல் உன் மார்க்கத்தைப் பாதுகாத்து வந்துள்ளேன். இப்பொழுது பகலின் இறுதி வேளையில் எனது உடலை நீ பாதுகாப்பாயாக என்று துஆ செய்தார்கள். அதற்குப் பிறகு அன்னார் ஷஹீதாகி விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) அவர்கள் இச்சம்பவத்தை எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்கள்:

பெருமானார் (ஸல்) அவர்கள் ஸஃபர் மாதம் ஹிஜ்ரீ 4 ஆம் ஆண்டு தம்முடைய 10 சஹாபிகளைக் கொண்ட ஒரு குழு ஆயத்தம் செய்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் (ரலி) அவர்களை அமீராக நியமித்தார்கள். மக்காவிற்கு அருகில் ஒளிந்து மறைந்து சென்று குறைஷிகளின் சூழலை அறிந்து வர வேண்டும் என்றும், அது தொடர்பாகவும் தமக்குத் தகவல் தரும்படியும் அவர்களுக்குக் கட்டளையிட்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் (ரலி) அவர்கள் பத்ர் போரின் போது குறைஷியர்களின் ஒரு பெரும் தலைவரைக் கொன்றிருந்தார்கள். ஆகவே, ஷஹீதாக்கப்பட்டவர்களுள் ஹஸ்ரத் ஆஸிம் பின் சாபித் (ரலி) அவர்களும் இருந்தார்கள் என்ற தகவல் மக்கத்து குரைஷிகளுக்குக் கிடைத்த போது, ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களின் தலையையோ அல்லது ஏதாவது ஓர் உறுப்பையோ கொண்டு வருவதற்காக சில நபர்களை அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் எந்தத் தலைவரைக் கொன்றிருந்தார்களோ அவரின் தாயார், தன் மகனுடைய கொலையாளியின் கபாலத்தில் மது ஊற்றி அருந்துவேன் என்று சபதம் எடுத்திருந்தாள். ஆனால் இறைவனுடைய செயல் எவ்வாறானதாக இருந்தது என்றால், இந்த மக்கள் அங்கு ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களின் உடலை நெருங்கியபோது குளவிகளும் தேனீக்களின் கூட்டமும் அவர்களின் உடலின் மீது அமர்ந்திருந்த காட்சியைக் கண்டார்கள். அந்தக் குளவிகளையும், தேனீக்களையும் அங்கிருந்து அகற்றுவதற்கு அம்மக்கள் எவ்வளவோ முயற்சி செய்தனர். அவை எவ்வகையிலும் அங்கிருந்து எழுந்திருப்பதாகத் தெரியவில்லை! இறுதியில் அவர்கள் தோல்வி அடைந்து திரும்பினர். அதன் பிறகு விரைவிலேயே மழையுடன் கூடிய புயல் ஒன்று வீசியது. ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களின் உடலை அது அங்கிருந்து எங்கோ அடித்துச் சென்று விட்டது.

ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் முஸ்லிமான போது, இனி தாம் எல்லா விதமான இணைவைப்பிற்குரிய விஷயங்களில் இருந்தும் முற்றிலும் விலகி இருப்பேன் என்று உறுதிமொழி எடுத்திருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் எந்தவொரு முஷ்ரிக்கையும் தொடக்கூட மாட்டேன் என்று உறுதி கூறியிருந்தார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களுக்கு ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களின் ஷஹாதத் மற்றும் இச்சம்பவம் பற்றி தெரிய வந்த போது, இறைவன் தனது அடியார்களின் உணர்வுகளை எந்த அளவுக்குப் பாதுகாக்கின்றான்! ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்கள் எந்தவொரு முஷ்ரிக்கையும் தொடக்கூட மாட்டேன் என்று சபதம் செய்திருந்தார்கள். மரணத்திற்குப் பிறகும் கூட அவன் ஹஸ்ரத் ஆஸிம் (ரலி) அவர்களின் உறுதிமொழியை நிறைவேற்றினான். முஷ்ரிக்கள் தொடுவதிலிருந்து அவர்களை அவன் பாதுகாத்தான் என்று கூறினார்கள்.

மீதமுள்ள சஹாபிகளும் பெரும் வீரத்துடன் சண்டையிட்டவாறு ஷஹீத் ஆகிவிட்டார்கள். இறுதியில் மூன்று சஹாபிகள் எஞ்சியிருந்தனர். அவர்களின் பெயர்கள், ஹஸ்ரத் குபைப் (ரலி), ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்னா (ரலி) மற்றும் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) ஆகியோர். நாங்கள் உங்களை ஒன்றும் செய்ய மாட்டோம்; நீங்கள் எங்களிடம் சரணடைந்து விடுங்கள் என்று எதிரிகள் அந்த மூன்று சஹாபிகளுக்கும் உறுதிமொழியும் வாக்குறுதியும் கொடுத்தார்கள். ஆகவே அந்த சஹாபிகள் தம்மை அவர்களிடம் ஒப்படைத்தபோது அவர்கள் தம் உறுதிமொழியை

முறித்துக் கொண்டார்கள். அப்போது ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்கள், இது நீங்கள் செய்த முதல் உடன்படிக்கை மீறுதலாகும். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களுடன் வரமாட்டேன் என்று கூறினார்கள். எதிரிகள் அவரை வலுக்கட்டாயமாக இழுத்துச் செல்ல விரும்பினர். அவரை தம்முடன் அழைத்துச் செல்வதற்கு எவ்வளவோ முயற்சி செய்தனர். ஆனால் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்கள் உடன்படாதபோது அவர்கள் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் தாரிக் (ரலி) அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள்.

அதற்குப் பிறகு எதிராளிகள் பணத்தின் மீதான ஆசையினால் குபைப் (ரலி) மற்றும் இப்னு தஸ்ணா (ரலி) ஆகியோரை மக்காவில் விற்று விட்டார்கள். குபைப் (ரலி) அவர்களை ஹாரிஸ் பின் ஆமிர் பின் நவ்ஃபல் உடைய மகன்கள் வாங்கிக் கொண்டார்கள். ஏனென்றால் குபைப் (ரலி) அவர்கள் பத்ர் போரில் ஹாரிஸைக் கொன்றிருந்தார்கள். ஸைத் பின் தஸ்ணா (ரலி) அவர்களை ஸஃப்வான் பின் உமையா வாங்கிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஸைத் பின் தஸ்ணா (ரலி) அவர்கள் ஷஹீத் ஆக்கப்படுவதற்காக கொண்டு வரப்பட்டபோது அபூ சுஃப்யான் பின் ஹரப் என்ற மக்கத்துத் தலைவர், ஸய்தே! இந்நேரத்தில் உமக்குப் பதிலாக எங்களுடைய கைகளில் முஹம்மது (ஸல்) அவர்கள் இருந்து, நாங்கள் உமக்குப் பதிலாக முஹம்மது (ஸல்) அவர்களின் தலையை வெட்டியிருந்தால், நீ உயிர் தப்பி உம் மனைவி மக்களுடன் மகிழ்ச்சியாக நாட்களை கழித்துக் கொண்டிருந்தால் அது எவ்வளவு நன்றாக இருந்திருக்கும்! இவ்வாறு உமது உள்ளம் விரும்பவில்லையா என்று உண்மையாக கூறு என்று கேட்டார். இதைக் கேட்டவுடன் ஸைது அவர்களின் கண்களில் கோபம் பொங்கியது. அவர் கோபத்துடன், அபூ சுஃப்யானே! நீ என்ன கூறுகிறாய்! இறைவன் மீது ஆணையாக! நான் உயிர் தப்பிப்பதற்கு பதிலாக ஹஸ்ரத் ரசூலுல்லாஹி (ஸல்) அவர்கள் தற்போது எந்த இடத்தில் இருக்கிறார்களோ அங்கு அவர்களின் கால்களில் ஒரு முள்குத்தி அது அவர்களுக்குத் துன்பம் கொடுப்பதைக் கூட நான் விரும்ப மாட்டேன் என்று கூறினார். இதைக் கேட்டவுடன் அபூ சுஃப்யான், அல்லாஹ்வின் மீது ஆணையாக! முஹம்மது (ஸல்) அவர்களின் தோழர்கள் அவர்களை எந்த அளவு நேசிக்கிறார்களோ அதே போன்று வேறு எவரும் பிறரை நேசித்ததாக நான் கண்டதில்லை என்று கூறினார். அதற்குப் பிறகு, ஹஸ்ரத் ஸைத் அவர்கள் ஷஹீத் ஆக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் குபைப் (ரலி) மற்றும் ஸைத் (ரலி) ஆகியோர் ஒரே நாளில் ஷஹீத் ஆக்கப்பட்டார்கள் என்று இப்னு அக்வா என்பவர் கூறுகிறார். எந்த நாளில் இவ்விருவரும் ஷஹீத் ஆக்கப்பட்டார்களோ அந்த நாளில் பெருமானார் (ஸல்) அவர்கள் அலைக்குமுஸ் ஸலாம் - உங்கள் இருவரின் மீதும் சாந்தி உண்டாவதாக என்று கூறிக்கொண்டிருந்தார்கள்.

ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களுடன் ஹாரிஸ் உடைய மகன்கள் கடுமையாக நடந்து கொண்டார்கள். அவர்களின் இந்த நடைமுறையைக் கண்ட ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள், எந்த ஒரு கண்ணியத்திற்குரிய சமுதாயமும் தமது கைதியுடன் இவ்வாறு நடந்து கொள்ளாது என்று கூறினார்கள். காஃபிர்களுடைய உள்ளத்தில் அதன் பெரும் தாக்கம் ஏற்பட்டது. அதற்குப் பிறகு அம்மக்கள் அவர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்ள ஆரம்பித்தனர். ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் கைதியாக இருக்குபோது ஒருநாள் ஒரு குழந்தை அவர்களுக்கருகில் வந்து விட்டது. ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்களின் கையில் அப்போது சவரக்கத்தி இருந்தது.

அவர்கள் அக்குழந்தையைத் தூக்கி வைத்துக் கொண்டார்கள். இதைக்கண்ட அக்குழந்தையின் தாயார், குபைப் அவர்கள் அக்குழந்தைக்கு ஏதேனும் நஷ்டம் ஏற்படுத்தி விடக்கூடாது என்று பயந்து விட்டாள். ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் அப்பெண்ணுடைய முகத்தில் கண்ட அச்சத்தை உணர்த்து கொண்டு, நான் இக்குழந்தைக்கு ஏதேனும் நஷ்டம் ஏற்படுத்தி விடுவேன் என்று நீ அஞ்சுகிறாயா? இறைவன் மீது ஆணையாக! நான் அவ்வாறு செய்ய மாட்டேன் என்று கூறினார்கள்.

நான் குபைப் அவர்களை விடச் சிறந்த கைதியைக் கண்டதே கிடையாது என்று அப்பெண் கூறி வந்தாள். நான் ஒருமுறை அவர்களுடைய கையில் ஒரு திராட்சை கொத்தைக் கண்டேன். அதிலிருந்து அவர்கள் திராட்சை பழத்தை எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்கள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டு இருந்தார்கள். அந்நாட்களில் மக்காவில் திராட்சை பழத்தினுடைய சுவடு கூட கிடையாது. அது இறைவனுடைய ரிஸ்க் ஆக இருந்தது. அது அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்ததாக நான் உணர்கிறேன் என்றும் அப்பெண்மணி கூறி வந்தாள்.

குறைஷிகள் அவர்களை ஷஹீத் ஆக்குவதற்காக ஹரம் பகுதியை விட்டு வெளியே கொண்டு சென்ற போது ஹஸ்ரத் குபைப் (ரலி) அவர்கள் இரு ரக்அத்துகள் தொழுவதற்கு அனுமதி கேட்டார்கள். அம்மக்கள் அனுமதி கொடுத்தார்கள். அவர்கள் தொழுது முடித்தார்கள். நான் பதற்றத்தின் காரணமாக தாமதப்படுத்துகிறேன் என்று நீங்கள் நினைத்து விடக்கூடாது என்பதற்காக நான் சுருக்கமாக தொழுது கொண்டேன் என்று கூறினார்கள். பிறகு அவர்கள் தம் இறைவனிடம், அல்லாஹ்வே! இந்த எதிரிகள் ஒவ்வொருவரையும் அழிப்பாயாக என்று துஆ செய்தார்கள். அதற்குப் பிறகு அவர்கள் பின்வரும் கவிதை வரிகளையும் வாசித்தார்கள்: நான் முஸ்லிமாக இருக்கின்ற நிலையில் கொல்லப்படுகிறேன். ஆகவே நான் வெட்டுண்டு எந்த திசையில் விழுவேன் என்பதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் வெட்டுண்டு விழுவது அல்லாஹ்வுக்காகவே ஆகும். அவன் விரும்பினால் துண்டாக்கப்பட்ட எனது உடல் உறுப்புகளிலும் பரக்கத்தை வழங்கி விடுவான்.

அதற்குப் பிறகு அந்த காஃபிர்கள் அவர்களை மிகவும் இரக்கமற்ற முறையில் ஷஹீத் ஆக்கினார்கள்.

இவை இம்மக்களுடைய தியாகங்களாக இருந்தன. இம்மக்களுடைய இம்மரணம் அச்சமற்றதாக இருந்தது. இஸ்லாத்திற்காக உயிரைக் கொடுப்பதற்கு எல்லா நேரமும் இந்த சஹாபிகள் ஆயத்தமாக இருந்தார்கள். இந்த போர் சம்பவத்தைப் பற்றிய குறிப்புகள் இன்னும் உள்ளன. வரக்கூடிய காலத்தில் எடுத்துக் கூறுவேன் இன்ஷா அல்லாஹ்!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**